கட்டடங்களைக் கட்ட ஹட்கோ மூலமாக அதிகப்படியான நிதி ஒதுக்கப்படும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைச் சேர்ந்த மாணவர்களுக்காக தங்கும் விடுதி அமைக்கப்படுகிறது. அதற்கு மேற்கொண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக கிட்டத்தட்ட 19 இலட்சம் ரூபாய்க்கு மேலாக பல விடுதிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. சில இடங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அப்படியென்றால், இது பரவலாகக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான நிதி ஹட்கோ மூலமாக ஒதுக்கப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, அதுபோன்று ஒதுக்கப்படாத இடங்கள் யாவை என்று உறுப்பினர் அவர்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 197, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

197—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம்

***13123-திருமதி மல்லிகா சின்னசாமி :**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

2002 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முசிறி தொகுதியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத் தர அரசுக்கு உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி மல்லிகா சின்னசாமி: நம்மையெல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கும் தங்கத் தலைவி, தானைத் தலைவி, சிங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர் பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது முதல் வினாவினைத் தொடங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். ஒவ்வோர் ஆண்டும், இப்பகுதியிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் +2 படித்து வெளியே செல்கின்றார்கள். அந்த மாணவ மாணவியர்கள் முசிறியிலிருந்து திருச்சிக்கு தினமும் சென்றுவருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே மாணவர்களின் நலன் கருதி முசிறியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத்தர மறுபரிசீலனை செய்து அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மாணவர்களின் நலன் காக்க வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொண்டு, ஏழை எளிய மாணவர்களின் நலன் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எங்கள் பகுதியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த முசிறி தாலுகாவில் ஏ.டி.எம். தொழிற்பயிற்சி மையம் மற்றும் திருச்சி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி என்ற இரண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. மேலும் திருச்சி மாவட்டத்தில் திருச்சியில் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், புள்ளம்பாடியில் ஒரு மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், மொத்தம் 26 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவையனைத்தும், திருச்சி மாவட்ட கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதால், மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அவசியம் இல்லையென அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 198, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.